அனுப்புநர்

முனைவர் பூ.ஆ.நரேஷ்,
இணை இயக்குநர் (பணியாளர்),
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

பெறுநர்

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

ந.க.எண். 009393 / டி (2) /2023 நாள் :19.06.2023

ஐயா/ அம்மையீர்,

பொருள் : சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்ககம் – தனித் தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வு (ESLC) ஆகஸ்ட் 2023 – தனித்தேர்வர்கள் அரசுத் தேர்வுகள் சேவை மையங்கள் வாயிலாக ஆன்–லைனில் விண்ணப்பித்தல் – சேவை மையங்களுக்கு அறிவுரை வழங்கக் கோருதல் – தொடர்பாக.

பார்வை: இவ்வலுவலக இதே எண்ணிட்ட செய்திக் குறிப்பு, நாள். 17.06.2023.

-----

பார்வையில் காணும் இவ்வலுவலக செய்திக் குறிப்பில், நடைபெறவிருக்கும் ஆகஸ்ட் 2023 தனித்தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வுக்கு (ESLC) விண்ணப்பிக்க விரும்பும் தனித்தேர்வர்கள் **20.06.2023 (செவ்வாய்கிழமை)** முதல் **28.06.2023 (புதன்கிழமை) வரையிலான நாட்களில் (ஞாயிற்றுக்கிழமை தவிர்த்து) காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணி வரை** கல்வி மாவட்ட வாரியாக அமைக்கப்பட்டுள்ள அரசுத் தேர்வுகள் சேவை மையங்களுக்கு (Government Examinations Service Centres) நேரில் சென்று ஆன்லைன் வழியாக விண்ணப்பிக்க வேண்டும் எனவும், மேற்குறிப்பிட்ட தேதிகளில் விண்ணப்பிக்கத் தவறும் தனித்தேர்வர்கள் **தட்கல் முறையில் 30.06.2023 (வெள்ளிக்கிழமை) மற்றும் 01.07.2023 (சனிக்கிழமை) ஆகிய இரு நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 05.45 மணி வரை விண்ணப்பிக்கலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.**

எனவே, தனித்தேர்வர்கள் அரசுத் தேர்வுகள் சேவை மையங்களுக்கு **20.06.2023** முதல் வருகை புரிவார்கள். அவ்வாறு வருகை புரிவோரது விண்ணப்பங்களை ஆன்–லைன் மூலம் பதிவேற்றம் செய்வது தொடர்பாக, தங்களது ஆளுகைக்குட்பட்ட அரசுத் தேர்வுகள் சேவை மையங்களாகச் (Government Examinations Service Centres) செயல்படும் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு பின்வரும் அறிவுரைகளை வழங்குமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

..2..

1. www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று, Click here to access Online Portal for School and Educational Offices என்ற வாசகத்தினை click செய்தவுடன் திரையில் School / Institute என்ற வாசகம் தோன்றும் அதை click செய்த பின்னர் சேவை மையங்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள **User ID மற்றும் Password-ஐ** பயன்படுத்தி, சேவை மையங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளைப் பின்பற்றி விண்ணப்பங்களை ஆன்–லைனில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

2. சேவை மையங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அறிவுரைகள் மற்றும் தனித் தேர்வர்களுக்கான அறிவுரைகள் ஆகியவற்றைப் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும்.

3. தனித்தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வுக்கான அறிவுரையினை சேவை மையத்தில் உள்ள அறிவிப்புப் பலகையில் ஒட்டவேண்டும்.

4. சேவை மையங்களில் 20.06.2023 (செவ்வாய் கிழமை) முதல் 28.06.2023 (புதன் கிழமை) வரையிலான நாட்களில் **(ஞாயிற்றுக்கிழமை தவிர)** பெறப்பட்டு பதிவு செய்த விண்ணப்பங்களையும், தட்கல் முறையில் **30.06.2023 (வெள்ளிக்கிழமை) மற்றும் 01.07.2023 (சனிக்கிழமை)** பதிவு செய்த விண்ணப்பங்களையும் கட்டுகளாகக் கட்டி, அந்தந்த மாவட்டங்களில் உள்ள அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் **03.07.2023 அன்று** ஒப்படைக்குமாறு சேவை மையங்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.

5. அவ்வாறு விண்ணப்பங்களை ஒப்படைக்கும் பொழுது, தனித்தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வுக்கு விண்ணப்பித்த தேர்வர்களது விவரங்களடங்கிய பட்டியலுடன், தேர்வர்களிடமிருந்து பெறப்பட்ட தொகையினையும் (தட்கல் கட்டண தொகையினையும் சேர்த்து) அரசாணை (2டி) என்.42 பள்ளிக்கல்வி (அ.தே)த் துறை, நாள்.11.04.2023–ன் படி பெறப்பட்ட ஆன்லைன் கட்டணத்தொகை ரூ.70/–ல் (Online Fees) சேவை மையங்களுக்கான சேவைக் கட்டணத்திற்காகவும்/பராமரிப்பு செலவினங்களுக்காகவும் ரூ.35/–ஐ வைத்துக் கொண்டு மீதமுள்ள ரூ.35/– x விண்ணப்பதாரர்கள் எண்ணிக்கை எனக் கணக்கிட்டு அத்தொகையினை **03.07.2023** அன்று அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகங்களில் நேரில் ஒப்படைக்குமாறு சேவை மையங்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.

மேலும், ஆன்–லைனில் விண்ணப்பங்களைப் பதிவேற்றம் செய்வது தொடர்பான சேவை மையங்களுக்கான அறிவுரைகள், எட்டாம் வகுப்பு தனித்தேர்வர்களுக்கான அறிவுரைகள் ஆகியவை இக்கடிதத்துடன் இணைத்தனுப்பப்படுகின்றன. சேவை மையங்களுக்கான அறிவுரைகளைப் பின்பற்றியே தேர்வர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்களை ஆன்–லைனில் பதிவேற்றம் செய்ய வேண்டும் எனவும், விண்ணப்பங்களைப் பதிவேற்றம் செய்வது தொடர்பான சந்தேகங்கள் ஏதேனும் எழும்பட்சத்தில், அந்தந்த மாவட்டங்களில் உள்ள அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்களை தொடர்பு கொள்ள வேண்டும் எனவும் சேவை மையங்களுக்கு அறிவுறுத்துமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

ஒம்/–
**இணை இயக்குநர்(பணியாளர்)**

**இணைப்பு :**

1. சேவை மையங்களுக்கான அறிவுரைகள்
2. தனித்தேர்வர்களுக்கான அறிவுரைகள்

<u>நகல்</u>

1. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்
   – தகவலுக்காகவும், உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்காகவும் நகல் அனுப்பப்படுகிறது.
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை) – தகவலுக்காக